*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*19 11 2025 6.30*
*புதன்கிழமை மாலை*

***மாநிலச் செய்திகள்***

***தலைப்புச் செய்திகள்***

*1) இயற்கை வேளாண்மையின் சர்வதேச முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
*2) விவசாயிகளின் நண்பனாக பிரதமர் திகழ்கிறார் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*
*3) போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.*
*4) கன்னியாகுமரி, திருநெல்வேலி உட்பட 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*
*5) Deaflympics போட்டியில் இந்தியாவின் Kushagra Singh Rajawat வெண்கலப்பதக்கம் வென்றார்.*

***இனி விரிவான செய்திகள் ---***

*இயற்கை வேளாண்மையின் சர்வதேச முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*இன்று கோவையில் நடைபெற்ற இயற்கை வேளாண்மை மாநாட்டில் பங்கேற்ற பிரதமர், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 21 ஆவது தவணையை விடுவித்து பேசினார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் 1 - 54 செகண்ட்ஸ்)*

*இயற்கை வேளாண்மையை ஒரு பருவத்திற்கு ஒரு ஏக்கரில் என்ற அடிப்படையில் விவசாயிகள் முதலில் தொடங்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் 2 - 58 செகண்ட்ஸ்)*

*அறிவியல் அடிப்படையிலான இயக்கமாக இயற்கை வேளாண்மையை உருவாக்க வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.*

*இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், விவசாயிகளின் நண்பனாக பிரதமர் திகழ்கிறார் என்று குறிப்பிட்டார்.*

*(சவுண்ட் பைட் – எல் முருகன் - 46 செகண்ட்ஸ்)*

*>>><><><><<<*

*போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.*

*இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருளின் தீமைகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.*

*>>><><><><<<*

*கூட்டுறவு சங்கங்கள் மக்களின் பணத்திற்கு முழு பாதுகாப்பு வழங்கி வருவதாக மாநில அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.*

*இன்று திருச்சியில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*திருச்சி ஸ்ரீரங்கம் புதிய பேருந்து நிலையம் விரைவில் திறக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.*

*>>><><><><<<*

*கன்னியாகுமரி, திருநெல்வேலி உட்பட 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் – 55 செகண்ட்ஸ்)*

*>>><><><><<<*

*கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வனக்கோட்டத்திற்கு உட்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் 40 யானைகள் புகுந்தன.*

*இதன்காரணமாக அப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறையினர் கேட்டுக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(சவுண்ட் பைட் – ராஜா – 40 செகண்ட்ஸ்)*

*>>><><><><<<*

***மாவட்டச் செய்திகள்***

*சேலம் மாவட்டம் ஏற்காடு மலைவாழ் கிராமங்களில் "மக்களை தேடி மருத்துவம்" திட்டப் பயனாளிகளுடன் மாநில அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் இன்று கலந்துரையாடினார்.*

*------------------------*

*திருவண்ணாமலை மாவட்டத்தில் கறவை மாடுகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று வழங்கினார்.*

*----------------------*

*காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் "தமிழ் கனவு – தமிழ் மரபு" நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.*

*--------------------*

*விழுப்புரம் மாவட்டம் விடூர் அணையில் இருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.*

*>>><><><><<<*

***விளையாட்டுச் செய்திகள்***

*Deaflympics போட்டியில் இந்தியாவின் Kushagra Singh Rajawat வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.*

*--------------------*

*உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் Neeraj Phogat -ம், ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவில் Jugnoo -ம் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.*

*மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Jasmine Lamboria-வும், 48 கிலோ எடைப்பிரிவில் மீனாட்சியும், 70 கிலோ எடைப்பிரிவில் அருந்ததியும் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் பவன் பர்த்வால், 50 கிலோ எடைப்பிரிவில் Jadumani Singh-ம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.*

*-----------------*

***மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Payas Jain – Akash Pal இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-7, 11-4, 11-9 என்ற செட்கணக்கில் ஓமனின் Ahmed Al Riyami – Muhannad Al Balushi இணையை வென்றது.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவில் Manus Shah இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***>>> End of News <<<***